## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 24/2021</u>

நாள் 06.08.2025
PW2 – கண்ணன்
த/பெ – ரத்தினசாமி
**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of August 2025.)**

<u>குறுக்கு விசாரணை</u>

1. வாதிகள் பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பண வரவு சம்பந்தமாகவும், வட்டி சம்பந்தமாகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். விளம்புகை பரிகாரம் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3–ம் வாதி ராஜேந்திரனின் மனைவி நீலவேணி எந்த தேதியில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்ற விபரம் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை. வழக்கு சொத்து போத்தம்பாளையம் கிராமத்தில் உள்ளது, அதனுடைய காலை எண் எனக்கு தெரியாது. 23.12.2015–ம் தேதியில் வாதிகள் ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணத்தில் சாட்சியாகவோ, பத்திர அலுவலகத்தில் சாட்சியாகவோ நான் கையெழுத்து போடவில்லை. மேற்படி ஆவணத்தில் ஆறுமுகம், சிவக்குமார் ஆகியோர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள். அவர்கள் பற்றி எனக்கு தெரியாது. 23.12.2015–ம் தேதியில் வாதிகளுடன் நான் இருந்ததற்கு எவ்விதமான எழுத்துபூர்வமான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பத்திரத்தை எழுதி கிரையம் கொடுப்பவர்கள், கிரையம் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் மட்டும் தான் பத்திர அலுவலகத்திற்குள் செல்வார்கள் என்றால் சரிதான். அதனால் நான் கிரைய ஆவணம் ஏற்பட்ட தேதியில் நான் வாதிகளுடன் பத்திர அலுவலகத்திற்கு உடன்

சென்றிருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த 23.12.2015–ம் தேதியிலேயே வாதிகள் 1–ம் பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. கிரைய ஆவணத்தில் இரண்டு சாட்சிகள் கையொப்பமிட்டால் போதுமானது என்றால் சரிதான்.

2. நானும், 4–ம் வாதி கணேசமூர்த்தியும் திருப்பூரில் உள்ள கம்பெனிக்கு வேலைக்கு சென்று வந்த வகையில் நண்பர் என்ற முறையில் எனக்கு பழக்கம். 2,3 பிரதிவாதிகளை பற்றி எனக்கு தெரியாது. அவர்களை எதற்காக இந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதியிடம் 2020 ஜீலை மாதம் வரையில் வாதிகள் வட்டி செலுத்தி வந்தார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு பற்றிய விபரம் எதுவும் நேரடியாக தெரியாது என்றும், 4–ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே கிரையம் கொடுக்கப்பட்ட சொத்திற்கு இடையூறு செய்ய வேண்டிபொய்யான இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும்,அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.06 15:06:01 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**